கவர் ஸ்டோரி

துண்டுக் காகிதம்

கருணாகரன்

"டேய், கண்ணு! நான் உனக்கு சிலோன் தர்றேன்... நீ எனக்கு அமெரிக்கா கொடு...!"

"சரி, இந்தா...! நாளைக்கு எனக்கு இங்கிலாந்து கிடைக்கும்.... அதுக்கு நீ எனக்கு ஆஸ்திரேலியா தரணும்!"

இரண்டு சிறுவர்களின் குரல் நம்மை வியப்பில் ஆழ்த்தியது. நாடுகளையே கொடுத்து வாங்கிக் கொள்கிறார்களே!

சற்று நின்று எட்டிப் பார்த்தால், தபால் தலைகள் சேர்ப்பதைப் பொழுது போக்காகக் கொண்டவர்கள் அவர்கள் என்பது தெரிகிறது.

சிறுவர்கள் மட்டுமா? இன்று பல வக்கீல்கள், டாக்டர்கள், என்ஜினியர்கள், குடும்பத் தலைவிகள், தொழிலாளர்கள் என்று பலரும் ஸ்டாம்ப் சேர்க்கின்றனர்.

அவர்கள் மட்டும்தானா? ஐந்தாம் ஜார்ஜ் மாமன்னர் ஒரு குறிப்பிட்ட தபால் தலை ஒரு குழந்தையிடம் இருப்பதை அறிந்தாராம். தான் மன்னன் என்பதையும் மறந்து அந்த மழலையிடம் கெஞ்சிக் கேட்டு அந்தத் தபால் தலையை வாங்கிக் கொண்டாராம்.

"இப்படித் தபால் தலை சேமிப்பு, ஜாதி - மதம் - இனம் - அந்தஸ்து என்று பாராமல் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்திக் கொடுக்கிறது" என்றார் சமீபத்தில் வெள்ளி விழா கொண்டாடிய தென்னிந்திய பிலடெலிக் அசோஸியேஷன் காரியதரிசி பாலகிருஷ்ணதாஸ்.

அவர் மேலும் தொடர்ந்தார்: "தபால் தலை சேகரிப்பது நல்ல பொழுது போக்கு மட்டும் அல்ல; இதனால் பூகோளத்தைப் பற்றிய நம் அறிவும் வளர்ச்சி பெறும். ஒரு நாட்டின் சரித்திரம் நமக்குத் தெரியவரும்."

"இது மட்டுமா? பிரபல விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், பெரிய மனிதர்கள் — இவர்களின் உருவங்களைப் பல நாடுகள் தபால்தலைகளாக வெளியிடுகின்றன. அவர்களைப் பற்றியும் நாம் அறியலாம்" என்றார் பக்கத்திலிருந்த கருணாகரன்.

தபால் தலைகள் பற்றி இந்த சங்கம் வெளியிடும் பத்திரிகையின் ஆசிரியர் கருணாகரன்.

பழைய தபால் தலைகள் இருந்தால் அவற்றைப் பணமாக்கலாம். 1854-ல் வெளியான நம் நாட்டு நாலணா தபால் தலை ஒன்றை இப்போது ஐயாயிர ரூபாய்க்கு விற்கலாம் என்கிறார்கள்.

முன்பு ஒரு சமயம் இந்தியத் தபால் தலைகள் சிலவற்றில் இங்கிலாந்து ராணியின் படம் தலைகீழாக அச்சாகி அவை புழக்கத்திலும் வந்துவிட்டன. இப்போது அந்தக் குறிப்பிட்ட தபால் தலை இருந்தால் நாற்பதாயிரம் ரூபாய்க்குக்கூட விற்கலாமாம்.

"1948-ல் நம் நாட்டில் மகாத்மாஜி யின் தலை போட்ட ஸ்டாம்ப் வெளியிட்டார்கள். இப்போது அது லண்டனில் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்று ஸ்டான்லி கிப்ஸன் விலைப் பட்டியல் புத்தகம் சொல்கிறது."—தான்.

"தபால் தலைகள் பற்றிய குறிப்புகள், விலைகள் முதலியன குறித்து இந்தப் புத்தகத்தில் வருடா வருடம் விவரம் வெளியிடுவார்கள். அது தவிர, இந்த கிப்ஸன் கம்பெனி, தபால் தலைகள் வியாபாரமும் செய்கின்றது." — கருணாகரன் அவர்களிடம் இருக்கும் கிப்ஸன் புத்தகத்தைப் பார்த்தேன். அது கிட்டத்தட்ட ஒரு தலையணை போலிருந்தது.

இந்தியாவைப் பொறுத்தவரை 1296-ல் அலாவுதீன் கில்ஜி காலத்திலேயே தபால் முறை இருந்ததாகத் தெரிகிறது. பின்னர், ஷெர்ஷா காலத்திலும் அக்பர் காலத்திலும் அது விருத்தியடைந்தது. ஆட்கள், குதிரைகள், ஒட்டகங்கள் மூலம் தபால்கள் கொண்டு செல்லப்பட்டன.

வெள்ளையர்கள் வந்ததும் இந்தியாவில் சென்னை - பம்பாய் - கல்கத்தா ஆகிய இடங்களில் தபால் நிலையங்கள் நிறுவப்பட்டன. அப்போது அவை அநேகமாக அரசாங்கத் தபால்களையே பரிமாறிக் கொண்டன.

பின்னர், பொதுமக்களின் தபால்களையும் அனுப்பத் தொடங்கினார்கள். தபால் நிலையங்களில் காசுடன் தபாலைக் கொடுத்து விட்டால் போதும், அதில் 'போஸ்ட் பெய்டு' என்று ஒரு முத்திரை குத்தி அனுப்பி விடுவார்கள்.

சில சமயங்களில் காசு கொடுக்காமல் தபாலைக் கொடுத்தால் அதில் Post unpaid என்ற முத்திரையைக் குத்தி, கடிதம் யார் விலாசத்திற்குப் போகிறதோ அவர்களிடம் கொடுத்துப் பணம் பெற்றுக் கொண்டது தபால் இலாகா. தபால் போகும் தூரம், எடை இவற்றை வைத்து அதற்கான கட்டணம் பெற்றுக் கொண்டார்கள்.

"இந்த நிலையில்தான் தபால் தலைகள் வரவேண்டிய அவசியம் உண்டானது. Unpaid கடிதங்களை வாங்கி, விஷயத்தைப் படித்துவிட்டு 'இந்தக் கடிதம் எனக்கு இல்லை' என்று சிலர் திருப்பிக் கொடுக்க ஆரம்பித்தனர். இதனால் தபால் இலாகா பெரும் நஷ்டத்திற்குள்ளானது. பிறகுதான் ஸ்டாம்ப் முறை புகுத்தப்பட்டது" என்றார் தான்.

Post unpaid என்பதைக் குறிக்க தமிழில் 'நட் பெயிடு' என்று எழுதி 1856-ல் போஸ்ட் செய்யப்பட்ட கவர் ஒன்று தானிடம் இருக்கிறது.

"உலகத்திலேயே முதல் முதலாக விமானம் மூலம் தபாலைக் கொண்டு சென்றது இந்தியாதான் என்று நினைக்கிறேன். இது 1911 வருடம் அலகாபாத்திலிருந்து நைனி வரை சென்றது. 1941-ல் கல்யாண் முதல் பம்பாய்வரை புறாவின் மூலம் தபால் அனுப்பியிருக்கிறார்கள். 1934-ல் இந்தியப் படை, ராக்கெட் மூலம்கூடத் தபாலை அனுப்பியிருக்கிறது. ஒரு ராக்கெட்டில் தபாலைக் கட்டி அதை ஏவிவிட்டால் ஒரு குறிப்பிட்ட தூரத்தில் ராக்கெட் போய் விழும். அங்கு அந்தத் தபாலை எடுத்துக் கொள்வார்கள்."

தானும் கருணாகரனும் தரும் செய்திகள் வியப்பைத் தந்தன. தபாலைப் பற்றி எத்தனை தெரிந்து வைத்திருக்கிறார்கள்!

"தான்! நீங்கள் எப்போது இந்த ஹாபியை ஆரம்பிச்சீங்க?"

"1950 என்று நினைக்கிறேன். இந்தியாவில் வெளியான பழைய ஸ்டாம்புகளில் அநேகமாக 90 சதவிகிதம் நான் சேர்த்து வைத்திருக்கிறேன். என் நண்பர்களுக்கும் எங்கள் சங்கத்தினருக்கும் உதவ வெளிநாட்டு ஸ்டாம்புகளும் வைத்திருக்கிறேன்." —தான்.

"எங்கள் ஆசையெல்லாம் நம் கல்வி நிறுவனங்கள் இந்த ஸ்டாம்ப் கலெக்ஷன் ஹாபியை ஆதரிக்க வேண்டும். அவர்களின் சரித்திர, பூகோள, விஞ்ஞான பாடங்களுக்கு இது பெரிதும் உதவும்." —கருணாகரன்.

தான்